## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பெனி -2019

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பெனியில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கம்பெனியின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பெனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பெனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பெனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பெனியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கம்பெனியின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு தரநியமம் 08 இல் 37 ஆவது பந்தி பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வேறுபாடு காரணமாக ஏற்படும் தாக்கத்தினை எதிர்காலத்துடன், (prospectively) அடையாளம் காண-ப்படுதல் வேண்டுமாயினும், ரூபா. **314,527** ஆன கணக்காய்வு கட்டணங்களின் குறை ஒதுக்கீடு மற்றும் ரூபா.**46,800** ஆன பணிப்-பாளர் கட்டணங்களின் மிகை ஒதுக்கீடு மீளாய்விற்கான ஆண்-டில் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக முன்னரான ஆண்டின் இலாபத்துடன் சீராக்கப்பட்டிருந்தது. | **2020** ஆண்டில் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்ப-ட்டதுடன், எதிர்வருங் காலத்திற்கு ஏற்புடையதாக புதிய மதிப்பீட்டு பெறுமதி-யுடன் சமர்ப்பிக்கின்றோம். | இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்க-மைவாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு தரநியமம் 16 இல் 51 ஆவது பந்தி பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யாமை காரணமாக மேலும் பயண்படுத்திய பெறுமதி ரூபா. **18,141,754** ஆன இரண்டு சொத்துக்களின் திறன் பெறுமதி பூஜ்ஜியப் பெறுமதியாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் செவ்வையாக்கி சமர்ப்பிக்கின்றோம். | இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்க-மைவாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பெனியின் நிதிக் கூற்றுகள் பிரகாரம், 2018 ஆம் அண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை காலப் பகுதிக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற வேண்டிய மொத்தம் ரூபா.**8,042,054** ஐ அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2020 ஒக்டோபர் 31 ஆந் திகதியில் கொமிஸ் தொகையும் அடங்கலாக ரூபா.907.725 தொகை மட்டும் கிடைக்கப்பெற வேண்டியுள்ள-துடன், ஏனைய கிடைக்கப் பெற வேண்டிய பணம் தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் உரிய மீதிகளின் உறுதிப்-படுத்தலின் பின்னர் பணிப்பாளர் சபை கூட்டங்களில் இது தொடர்பாக முன்-வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை-களை மேற்கொள்ளப்படும். | நீண்ட காலம் தொட-க்கம் அறவிடப்பட வேண்டிய மீதியாக காட்டப்பட்டுள்ள இந்த பணத் தொ-கையினை அறவிடு-வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்-கப்பட்டுள்ள வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய செலவினத்தில் காட்டப்பட்டுள்ள மொத்தம் ரூபா. **53,918,359** ஆன மீதி நீண்ட காலம் தொடக்கம் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்-கொண்டிருக்கவில்லை. | **2020** ஆம் ஆண்டில் ஏனைய கடன் கொடுநர்கள் மற்றும் அட்டுறு செலவின மீதிகளின் உறுதிப்படு-த்தலின் பின்னர் பணிப்பாளர் சபை கூட்டத்தில் இதனை முன்வைத்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மரண நட்டஈடு தாமதத்திற்கு காரணம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்மூலம் சட்டரீதியான நட்டஈட்டாளர்களின் பெயர் அட்டவணை இதுவரை சமர்ப்பிக்க முடியாமை ஆகும். பணம் செலுத்துவதற்கு உரிய | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பரிந்துரைக்கப்பட்ட நட்டஈட்டாளரின் பெயர் அட்டவணை கிடைக்கப்பெற்றவுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். வீசா பணம் மீள பெற்றுக்கொள்ளும் பொருட்டு இது வரை எந்தவொரு தொழிலாளரும் கோரிக்கை முன்வைக்கவில்லை என்பதுடன், கோரிக்கை முன்வைத்தவுடன், உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. **3,015,782** ஆன நட்டஈடு ஏற்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் இலாபம் ரூபா.**6,648,782** ஆகியது. அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. **9,664,564** ஆன வீழ்ச்சியை அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு சேவை வழங்கல் வருமானம் குறைவடைதல் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செல்நெறி பகுப்பாய்வு

கம்பெனியில் முழுமொத்த வருமானத்தில் 46.83% ஐ நிலையான வைப்புகளின் முதலீடுகள் மூலம் உழைக்கப்பட்ட வட்டியாவதுடன், வியாபார நடவடிக்கைகளில் உழைக்கப்பட்ட வருமானம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.மில்லியன் **12.39** ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் மொத்த வருமானமான ரூபா. **22,696,922** இல் **68.8** % அதாவது ரூபா.**15,635,790** ஐ ஊழியர் செலவு பொருட்டு செலவிடப்பட்டிருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பெனி மற்றும் ஜப்பானில் IR நிறுவனம் (INTERNATIONAL RELATIONS ORGANIZATION) என்பவற்றுக்கிடையில் 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொண்ட உடன்படி- | வெளிநாடு சென்ற ஒருவரிடமிருந்து ஆட்சேர்ப்புச் செலவினமாக ரூபா. **250,000** ஆன தொகை எமது நிறுவனத்திடம் பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்- | நிகழ்ச்சித்திட்டத்தின் உடன்படிக்கை பிரகாரம் வெளிநாடு செல்கின்ற தொழில்நுட்ப பயிற்சி பெறுநர்களிடமிருந்து நிருவாக செலவினமாக |

| | | |
|---|---|---|
| க்கை பிரகாரம் ஜப்பானிடம் தொழில்நுட்ப பயிற்சி பெறுநர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த ஒரு பயிற்சிபெறுநர் பொருட்டு நிருவாக செலவினமாக கம்பெனியிடம் 5,000 ம் யென் மாதாந்த கட்டணம் உரித்தாகும் என்று உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், 2020 யூலை 30 ஆந் திகதியில் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 12 பயிற்சி பெறுநர்களிடமிருந்து உடன்படிக்கை பிரகாரம் அந்த பணத் தொகையினை கம்பெனியிடம் பெற்றுக்கொள்வதற்கு 2020 செப்தெம்பர் 08 ஆந் திகதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன், மேற்படி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பெனியால் நிருவாக செலவினமாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு பயிற்சி பெறுநரிடமிருந்து ரூபா. **224,413** என்ற வகையில் 12 பயிற்சி பெறுநர்களிடம் ரூபா.2,**692,956** ஐ அறவிடப்பட்டிருந்தது. | பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முதலாவது அனுமதி பிரிவில் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா. **278,885** இற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>வெளிநாடு செல்கின்ற ஒருவர் பொருட்டு 5000 ம் யென் படி யென் **205,000** தொகை சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் எமது நிறுவனத்திற்கு 2020 செப்தெம்பர் 28 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களால் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருக்கையில் நிருவாக கட்டணங்கள் தொழிற் படையினரிடமிருந்து அறவிடுதலாகாது. அதன்படி இந்த பிழையை செவ்வையாக்குவதற்கும், உடன்படிக்கைக்கு முரணாக வெளிநாடு சென்ற பயிற்சி பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள பணத் தொகை மீண்டும் செலுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **2018** மற்றும் **2019** ஆம் ஆண்டுகளில் கம்பெனிக்கு 10 நாடுகளில் 22 கட்டளைகளின்கீழ் 4106 வேலைவாயய்ப்புகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அதில் கம்பெனியிடம் நேரடியாக 18 கட்டளைகளுக்கு ஏற்புடையதாக 2568 வேலைவாய்ப்புகளின பொருட்டு 02 ஆண்டுகளுக்காக | **2018** மற்றும் **2019** ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கம்பெனியால் அனுமதி பெற்றுக்கொண்ட ஒவ்வொரு வேலைவாய்ப்பு கட்டளைகள் தொடர்பான நிலைமை களையும் அது தொடர்பான பிரச்சினைகளையும் | கம்பெனியிடம் கிடைக்கப்பெறும் வேலைவாய்ப்பு கட்டளைகளின் பொருட்டு பொருத்தமான தொழிற்படையினரை தெரிவு செய்து வேலைவாய்ப்புகளின் பொருட்டு அனுப்பி வைக்கும் துரிதமனாதும் வினைத்திறனுடனுமான நிகழ்ச்சித்திட்டம் |

| | | |
|---|---|---|
| செல்லுபடியாகிய கட்டளைகளுக்கு கணக்காய்வு திகதியான 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலும் 43 தொழிலாளர்களை மட்டும் அதாவது கட்டளை எண்ணிக்கையில் 1.67% மட்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் வெளியக தரப்புகளால் கம்பெனியிடம் சமர்ப்பிக்கப்பட்ட 4 வேலைவாய்ப்பு கட்டளைகளுக்கு ஏற்புடையதாக 1528 வேலைவாய்ப்புகளில் 366 தொழிலாளர்கள் அதாவது **23%** அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். | அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கம்பெனியால் தாபித்தல் வேண்டும். அதேபோன்று கம்பெனிக்கு இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வேலைவாய்ப்பு கட்டளைகளுக்கு தொழிற்படையினரை அனுப்பி வைக்காமைக்கான காரணங்களையும் பரிசோதனை செய்தல் வேண்டும். |
| **(ஆ)** மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு வருமானம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.**12,392,320** அதாவது **51** % ஆல் குறைந்திருந்தது. அதேபோன்று கம்பெனிக்குரிய மொத்த முதலீடு ரூபா. **99,047,029** ஆயினும், ரூபா **.53,918,359** ஆன செலுத்தப்பட வேண்டிய செலவினம் காரணமாகவும் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. **2,909,762** ஆன நட்டம் காரணமாகவும் அதன் நிதிசார் நிலைமை திருப்திகரமற்றதென அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்து கம்பெனி இலாபம் பெறும் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கம்பெனியின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பன நிறைவேற்றிக் கொள்கின்ற வகையில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பெனியின் பொது முகாமையாளர் பதவி அடங்கலாக பிரதான 3 முகாமையாளர்கள் பதவிகளின் பொருட்டு நிரந்தர பணியாற் தொகுதியினரை நியமனம் செய்யாது, | நிரந்தர பணியாற்தொகுதி நியமனம் செய்யாமைக்கு காரணம் யாதெனில், சம்ப-ந்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்கையில் அதன் பொருட்டு | கம்பெனி ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்கள் |

| | | |
|---|---|---|
| பதில் கடமையாற்றும் அடிப்படையில் இலங்கை வெளிநாட்டு வேலை-வாய்ப்பு பணியகத்தின் அலுவலர்கள் அப் பதவிகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். | சம்பளம் மற்றும் ஏனைய படிகளை வழங்குவதற்கு நிறுவனத்தின் நிதிசார் நிலைமை வலுவற்-றதாக இருத்தலும், வெளி-நாட்டு வேலைவாய்ப்பு பணிய-கத்தின் கீழ் இயங்கும் நிறுவனமான எமது நிறுவன-த்திற்கு பணியகத்தால் அதற்கு தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் உள்ள அலுவலர்களை அதன் உயர் முகாமைத்துவம் நியமனம் செய்திருத்தலும் ஆகும். எவ்வாறாயினும், பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தர அலுவலரொருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிறைவேறாது கம்பெனி நட்டம் அடையும் நிலை-மைக்கு வந்துள்ளமை தொட-ர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்-பதுடன், ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி தகுதி வாய்ந்த பணியாற் தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **2003** யூன் **02** ஆந் திகதிய பீஈடீ **/12** அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையில் **6.5.1** பிரிவு மற்றும் **2004** பெப்ருவரி 24 ஆந் திகதிய **01/2004** ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நிதிக் கூற்றுகள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதி-யிடம் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல் 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுகள் உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுகளை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பெனியின் செயலாற்றுகை அதிகரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் செயற்றிட்டம் ஊடாக திட்டமிடப்பட்ட வெளிநாடுகளில் உப முகவர்கள் மூலம் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ளுதல். (Job hunts), வெளிநாடுகளில் தொழிலாளர் நலனோம்பல் பிரிவுகளின் அலுவலர்கள் மூலம் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தல் மற்றும் உள்ளக வேலைவாய்ப்பு வங்கி அபிவிருத்தி ஆகிய செயற்பாடுகளை கம்பெனியால் நிறைவேற்றப்படவில்லை. | வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.<br>வெளிநாட்டு தொழிலாளர் நலனோம்பல் பிரிவுகளை அறிவுறுத்தல் எழுத்திலும் வாய்மொழி மூலமும் மேற்கொண்ட போதிலும், வீட்டுப் பணிப் பெண்களுக்கான வெற்றிடங்கள் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ளன.<br>உள்ளக வேலைவாய்ப்பு வங்கி இற்றைப்படுத்துவதற்கான முயற்சி எடுத்த போதிலும் நிலவுகின்ற நிதிசார் நெருக்கடி காரணமாக பல்வேறு ஆண்டுகளில் மேற்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முடியவில்லை. | வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |